**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.32/2020 பி.வா.சா.1 மலையப்பன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.01.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்து பொள்ளாச்சி நகராட்சியின் எல்லையில் உள்ள ஜோதி நகரில் உள்ளது. அப்பகுதியானது தற்போது தான் வளர்ந்து வருகிறது என்றால் சரிதான். அப்பகுதிக்கு டவுன் பஸ் போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதி சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் அவ்வாறு பாத்தியப்பட்டதாக காட்டும் ஆவணங்கள் ஏதும் எங்கள் அலுவலகத்தில் இல்லை. வழக்கு சொத்து வாதியால் பள்ளி நிர்வாகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் அத்தகைய ஆவணங்கள் ஏதும் எங்கள் அலுவலகத்தில் இல்லை. அப்பள்ளியில் அக்கம் பக்கம் கிராமங்களில் இருந்து சுமார் 100 மாணவர்கள் படித்து வருகிறார்கள் என்றால் அதற்கும் அதிகமாகவே இருப்பார்கள்.

2) ஒரு சொத்திற்கு வரி விதிப்பு அதன் உரிமையாளர் பெயரில் தான் விதிக்கப்படும் என்றால் சரிதான். ஒருவர் அச்சொத்தில் வாடகைக்கு இருந்தாலும் சொத்து வரியானது அதன் உரிமையாளர் பெயரில் தான் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அனுப்பப்பட்ட 2 சிறப்பு அறிவிப்புகளும் அங்கு இயங்கி வரும் பள்ளியின் பெயரில் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றும் வாதி பெயரில் அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். அங்கு இயங்கி வரும் பள்ளி அச்சொத்தின் உரிமையாளர் இல்லை என்பதால் மேற்படி 2 சிறப்பு அறிவிப்புகளும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

3) வாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும் வழக்கு சொத்து பள்ளிக்கு வாடகைக்கு தான் விடப்பட்டுள்ளது என்றும் கட்சி செய்து வாதி சங்கம் இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ள நிலையில் அவற்றை பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 சிறப்பு அறிவிப்புகளுக்கு பதில் அளிக்கும் வகையில் 25-10-2018 அன்று வா.சா.ஆ. 3 ஆட்சேபணை அறிவிப்பு வாதியால் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆட்சேபணை அறிவிப்பின் பெயரில் நகராட்சி எவ்வித பதில் அளிக்கவோ விசாரணை மேற்கொள்ளவோ இல்லை என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பு கொடுத்துள்ளோம். அந்த பதில் அறிவிப்பை நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தெரியவில்லை . ஆனால் பதில் அறிவிப்புடன் உரிய அரசிதழையும் அனுப்பி இருந்தோம். நான் சொல்வது போல் பதில் அறிவிப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

4) வழக்கு பள்ளியில் இருந்து வாதி சங்கத்திற்கு வரும் ஆண்டு வாடகை ரூ. 24,000 மட்டுமே என்றும் அதற்கான ஆவணங்கள் வாதி வசம் உள்ளது என்றும் சொன்னால் அது பற்றி நகராட்சிக்கு தெரியாது . சட்ட விதிகள் படி வரி விதிப்பு செய்துள்ளோம். வழக்கு சொத்திற்கு வரி விதிப்பதற்கு முன் வாதி சங்கத்திற்கு அறிவிப்பு ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி சங்கத்தை விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். ஒரு சொத்தின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொண்டே வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வரி விதிப்பு செய்வதற்காக கட்டிடங்களை அளக்க செல்லும் முன் சொத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் வாதி சங்கத்திற்கு அத்தகைய அறிவிப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனவே , வழக்கில் விதிக்கப்பட்ட வரி விதிப்பானது சட்டவிதிகளை முறையாக பின்பற்றாமல் தன்னிச்சையாக விதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ. 3 ஆட்சேபணை அறிவிப்பிலேயே வாதி சங்கம் தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என தெரிவித்த போதிலும் அதனை பொருட்படுத்தாது விசாரணை மேற்கொள்ளாமல் கடந்த 18.09.2019 தேதியில் மீண்டும் பள்ளியின் பெயரில் 2 கேட்பு அறிவிப்பு அனுப்பி உள்ளோம் என்றால் ஆரம்பம் முதலே பள்ளியின் பெயரில் தான் வரி விதிப்பு இருந்து வந்ததால் அனைத்து

நடவடிக்கைகளும் பள்ளியின் பெயரிலே எடுக்கப்பட்டது . கேட்பு அறிவிப்புகளும் பள்ளியின் பெயருக்கே அனுப்பப்பட்டது. பள்ளியின் பெயரில் கேட்பு அறிவிப்புகள் அனுப்பியது தவறு என்றால் சரியல்ல. மேற்படி கேட்பு அறிவிப்புகளுக்கு எதிராக வாதி சங்கம் கடந்த 01-10-2019 அன்று வா.சா.ஆ. 7 ஆட்சேபணை அறிவிப்பு அனுப்பினர் என்றால் அது தெரியவில்லை.

6) வா.சா.ஆ. 7 ஆட்சேபணை அறிவிப்பின் பெயரில் நகராட்சி எவ்வித பதில் அளிக்காமலும் விசாரணை மேற்கொள்ளாமலும் கடந்த 24-01-2020 அன்று பள்ளிக்கு வா.சா.ஆ. 9 ஜப்தி அறிவிப்பு அனுப்பி உள்ளோம் என்றால் எங்களுக்கு வாதி சங்கத்திற்கு பதில் அளிக்க தேவை ஏற்படாததால் பள்ளிக்கு நேரடியாக ஜப்தி அறிவிப்பு அனுப்பினோம். வாதி சங்கத்திற்கு பதில் அளிக்க தேவை இல்லை என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 ஜப்தி அறிவிப்பில் 30-01-2020 அன்று பள்ளியை ஜப்தி செய்து 04-02-2020 அன்று ஏலம் விடப்போவதாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஜப்தி அறிவிப்பு படி பள்ளியை ஜப்தி செய்யவோ, அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த பள்ளியின் பொருட்களை ஜப்தி செய்யவோ நகராட்சிக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

7) வரி விதிப்பிற்கான அனைத்து அறிவிப்புகளும் நடவடிக்கைகளும் நகராட்சியால் பள்ளியின் பெயரில் தான் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். பள்ளி வழக்கு சொத்தின் உரிமையாளர் இல்லை என்பதால் பள்ளியின் பெயரில் ஏற்பட்ட அனைத்து அறிவிப்புகளும் நடவடிக்கைகளும் செல்லாது என்றால் சரியல்ல. அதனை வழக்குமூலமாக காட்டி தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் இடைகால தடையாணை விசாரணைக்கு பின் வாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். அந்த இடைகால தடையாணைக்கு எதிரான மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு பள்ளியின் பெயருக்கோ வாதியின்

பெயருக்கோ வரி விதிப்பு தொடர்பாக புதிதாக அறிவிப்பு ஏதும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான்.

8) எதிர் வழக்குரையில் வாதி உரிமையாளராகவே இருந்தாலும் பள்ளி வழக்கு சொத்தில் இயங்கி வருவதால் பள்ளியின் பெயரிலேயே வரி விதிப்பு செய்யப்பட்டது சரி என கட்சி செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. பள்ளியையும் வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரியுள்ள கட்சியும் தவறானது என்றால் சரியல்ல. பள்ளி நிர்வாகம் வாதி சங்கத்திற்கு எவ்வளவு வாடகை செலுத்துகிறார்கள் என தெரிந்து கொள்ள அவசியம் இல்லை என கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்தில் உள்ள கட்டிடம் 34 ஆண்டுகள் பழமையானது என்றால் அது பற்றி தற்போது எனக்கு தெரியாது. இருப்பினும் கட்டிடத்தை அளக்கும் போது அதன் வயதை கணக்கில் கொண்டு மதிப்பு இழப்பு கணக்கிட்டு தான் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. கட்டிட பயன்பாட்டை கணக்கில் கொள்வதாக கூறியுள்ளபோதும் கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளதை நகராட்சிக்கு தெரிவித்தும் அதனை நகராட்சி கருத்தில் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சரியான சட்டவிதிகள் படி தான் வரி விதிப்பு செய்துள்ளோம். எதிர்வாதத்தில் பள்ளி நிர்வாகிகள் முன்னிலையில் தான் கட்டிடம் அளக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதி சங்கம் அங்கு இருந்ததாக குறிப்பு இல்லை என்றும் சொன்னால் சரிதான். வரி விதிப்பு பள்ளியின் பெயரில் இருந்ததால் அளவை பள்ளி நிர்வாகிகள் முன்னர் ஏற்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

10) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பான பி.வா.சா.ஆ. 7 தனியார் பள்ளிகள் தொடர்புடையது என்பதால் இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. வழக்கு பள்ளியும் தனியார் பள்ளி தான். வழக்கு பள்ளி தனியார் பள்ளி அல்ல என்றால் சரியல்ல.

ஆதியில் இருந்து வரி விதிப்பு தொடர்பான அறிவிப்புகளும், நடவடிக்கைகளும் வழக்கு சொத்து உரிமையாளரான வாதி சங்கத்தின் பெயரில் மேற்கொள்ளாமல் பள்ளியின் பெயரில் மேற்கொண்டு உள்ளதால் அவை செல்லத்தக்கது அல்ல என்றும் வழக்கு பரிகாரம் வாதி சங்கத்திற்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி